Rediffusion/Edelman

**Publication:** Pirpagal
**Date:** 24/08/2013
**Edition:** Coimbatore
**Page No.:** 2
**Headline:** Winners of TCS IT Wiz

### ஸ்மார்ட் டெக் விசார்ட்ஸ்-2013 போட்டிகளில்

# கோவை ஜிகேடி பள்ளி மாணவர்கள் வெற்றி



கோவை,ஆக.24-

கோயம்புத்தூர் குனியமுத்தூர் , சுகுணாபுரத்தில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரியில் நடைபெற்ற டிசிஎஸ் ஐடி விஸ் போட்டிகளில் கோயம்புத்தூரைச் சேர்ந்த பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 700 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். பள்ளிகளுக்கு இடையிலான இந்தியாவின் மிகப்பெரிய ஐடி வினாடி வினா போட்டியான டிசிஎஸ் ஐடி விஸ் போட்டிகளை முன்னணி தகவல் தொழில்நுட்ப சேவைகள், ஆலோசனை மற்றும் வர்த்தக தீர்வுகள் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டிசிஎஸ்) ஏற்பாடு செய்திருந்தது.

கோயம்புத்தூரில் நடைபெற்ற பிராந்திய இறுதிச் சுற்றில் ஜிகேடி பள்ளியைச் சேர்ந்த நவீன் கிருஷ்ணன், மற்றும் ராகுல் முதலிடம் பெற்றனர். கோத்தகிரி செயின்ட் ஜூடிஸ் பப்ளிக் பள்ளியை சேர்ந்த அனுஷியா பிரபா மற்றும் ஜியோன் பிலோமின் ஆண்டனி ஆகியோர் இரண்டாவது இடம் பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு தலா ஒரு ஐபேட் மற்றும் இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ஒரு கேலக்ஸி டேப்லெட் பரிசாக அளிக்கப்பட்டது. வெற்றி பெற்றவர்கள் ஃஸ்மார்ட் டெக் விசார்ட் 2013 பட்டத்திற்கான மெகா இறுதிச் சுற்றில் கோயம்புத்தூர் சார்பில் கலந்து கொள்வார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்கு சென்னை செயல்பாடுகளின் தலைவர் மற்றும் குரோத் மார்க்கெட்ஸ் தலைவர் ரவி விஸ்வநாதன் பரிசுகளை வழங்கினார்.

இந்த ஆண்டு டிசிஎஸ் ஐடி விஸ் மூலம் ஸ்மார்ட் டெக் விசார்ட்டுக்கான தேடல் நாடு முழுவதும் 14 நகரங்களில் நடத்தப்படுகிறது. யுஏஇ யில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் மெகா இறுதிப் போட்டியில் பங்கேற்பார்கள்.

முதல்கட்டமாக எழுத்து தேர்வில் முதல் ஆறு இடங்களைப் பிடித்த அணிகள் பிராந்திய இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றன.

இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய ஆறு அணிகளுக்கும் டபுள் டபுள் ஜிம் பேக், ஹெட் போன்கள், யுஎஸ்பி பென் டிரைவ்கள், நோட்புக் ஸ்பீக்கர்கள் மற்றும் டிசர்ட்களை டிசிஎஸ் பரிசாக அளித்தது.